
ஸ்ரீ நாராயண குரு வின்

அனுகம்பா தசகம்

(கருணைப் பதிகம்)



தமிழாக்கம் மற்றும் விரிவுரை
மேலூர் தாமோதரன்

ஸ்ரீ நாராயண குருவின்

அனுகம்பா தசகம்

(கருணைப் பதிகம்)

தமிழாக்கம் மற்றும் விரிவுரை

மேலூர் தாமோதரன்

பதிப்பகத்தார்:

குருதேவதர்மம்

2, இராஜேஸ்வரி காலனி, விருகம்பாக்கம்,
சென்னை - 600 092. போன்: 4726107

ஸ்ரீ நாராயண குருவின்

அனுகம்பா தசகம்

(கருணைப் பதிகம்)

தமிழாக்கம் மற்றும் விரிவுரை:

திரு. மேலூர் தாமோதரன்

FIRST EDITION '2000

1000 COPIES

Design Layout, Typeset & Printing:
Sree Narayana Guru Mandiram Press
99, Arcot Road, Chennai-600 092.

Publishers:
GURUDEVADHARMAM
Rajeswari Colony,
Virugambakkam, Chennai-600 092
Ph: 472 6107, 372 1262

Price: Rs.8.00/-

முன்னுரை

கருணை என்பது ஒரு தெய்வீக மனப்பான்மை. நேயமும் தியாகமும் அளவின்றி ஒருமித்த பக்குவம்.

கருணைக்கும் கருணையுள்ளம் படைத்த புண்யாத்மாக்களுக்கும் புகழஞ்சலி செலுத்தும் வகையில் ஸ்ரீ நாராயண குரு மலையாள மொழியில் இயற்றிய "**அனுகம்பா தசகம்**" என்ற கவிதைத் தொடரை திரு. மேலூர் தாமோதரன் அவர்கள் "**கருணைப் பதிகம்**" என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்து விரிவுரையும் கொடுத்து தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளார். இந்த நூலை குருவின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

குருவின் சேவையில்,

குருதேவதர்மம்

அனுகம்பா தசகம்

1 ஒரு பீடயெறும்பினும் வருத்
தருதென்னுள்ளனுகம்பயும் சதா
கருணாகர! நல்குகுள்ளில் நின்
திரு மெய்விட்டகலாதெ சிந்தயும்.

2 அருளால் வருமின்ப, மன்பகன்-
னொரு நெஞ்சால் வருமல்லலொக்கயும்
இருளன்பினெ மாற்றுமல்லலின்
கருவாகும் கருவா மிதேதினும்.

3 அருளன்பனுகன்ப மூன்னினும்
பொருளொன்னாணிது ஜீவதாரகம்:
'அருளுள்ளவனாணுஜீவி', யென் -
னுருவிட்டீடுக யீ நவாட்சரி.

4 அருளில்லயதெங்கிலஸ்தி தோல்
ஸிர நாறுன்னொருடம்பு தானவன்;
மருவில் பிரவஹிக்கு மம்புவப்
புருஷன் நிஷ்ஃபல கந்த புஷ்பமாம்.

5 வருமாறுவிதம் விகாரவும்
வருமாறில்லறிவின்னிதின்னு நேர்;
உருவாமுடல் விட்டு கீர்த்தியா -
முருவார்ன்னிஙனுகம்ப நின்னிடும்.

6 பரமார்த்தமுரச்சு தேர்விடும்
பொருளோ? பூத தயாக்ஷமாப்தியோ
சரளத்வய பாஷ்யகாரனாம்
குருவோ யீ யனுகம்பயாண்டவன்

7 பூருஷாகிருதி பூண்ட தெய்வமோ?
நரதிவ்யாகிருதி பூண்டதர்மமோ?
பரமேச பவித்திர புத்ரனோ?
கருணாவான் நபி முத்துரத்னமோ?

8 ஜீவர மாற்றி விபூதிகொண்டு முன்
னரிதாம் வேலைகள் செய்த மூர்த்தியோ?
அருதாதெ வலஞ்சு பாடி ஔ-
தரமாம் நோவுகெடுத்த ஸித்தனோ?

9 ஹரனென்னெழுதி பிரஸித்தமாம்
மறயொன்னோதிய மாமுனீந்த்ரனோ?
மரியாதுடலோடு போயொரப்-
பரமேசன்றெ பரார்த்யபக்தனோ?

10 நரரூபமெடுத்து பூமியில்
பெருமாறீடின காமதேனுவோ!
பரமாத்புத தான தேவதா
தருவோயீ யனுகம்ப யாண்டவன்?

ஃபலசுருதி

அருமாமற யோது மர்த்தவும்
குருவோதும் முனியோது மர்த்தவும்
ஒரு ஜாதி யிலுள்ளதொன்னுதான்
பொருளோர்த்தாலகிலாகமத்தினும்.



செய்யுள் – 1

ஒரு பீடயெறும்பினும் வருத்
தருதென் னுள்ள னுகம்பயும் சதா
கருணாகர! நல்குகுள்ளில் நின்
திரு மெய்விட்டகலாதெ சிந்தயும்.

விளக்கம்:–

ஒரு பிரார்த்தனையுடன் இந்தப் பாடல் ஆரம்பமாகிறது.

கருணையுள்ளம் படைத்த கடவுளே: எறும்புக்கும் கூட ஒரு பீடையும் நேராமல் இருக்க வேண்டும் என வேண்டக்கூடிய கருணையுள்ளமும் உன் திருமெய்யைப் பற்றிய விடாச் சிந்தனையும் எனக்குத் தந்தருள்வாய்.

அப்படி, கருணையைப் பற்றிப் பாடப் போகிறவன் கருணை உள்ளம் படைத்தவனாக இருக்க வேண்டுமல்லவா? நெஞ்சில் ஈவிரக்கமில்லையெனில் ஒருவனால் எப்படி கருணையின் அருமையை அறிந்துகொள்ள முடியும்? அதனால் கருணையைப் பற்றி பாடப்போகின்ற குருதேவன் முதற்கண் அந்த கருணையெனும் தெய்வீகத் தன்மையை நெஞ்சாறத் தந்தருள வேணுமென்று கடவுளிடம் வேண்டுதல் விடுகிறார்.

கருணையைத் தரக்கூடிய அந்த பரம்பொருள் கருணை மிகுந்த ஓர் இருக்கையாயிருக்க வேண்டுமல்லவா? இதைப் புலப்படுத்துவதற்குத்தான் கருணை காட்டுபவன் என்று பொருள் கொண்ட 'கருணாகரா' எனும் வார்த்தையை வைத்துக் கடவுளை அழைக்கிறார் குருதேவன்.

ஏன் எறும்பு?

அந்த கருணை எத்தகையதான தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும்?

ஒரு எறும்புக்கும் கூட கெடுதல் வரக்கூடாது என்று கடவுளிடம் வேண்டக்கூடிய அளவுக்கு அந்தக் கருணை இதயத்தில் நிரம்பி வழியணும்.

எறும்பு ஓர் அற்ப ஜீவி. தெரிந்தோ தெரியாமலோ ஒரு எறும்பை துன்புறுத்தினால் அது ஒரு பெரிய தவறு என்று உலகம் எண்ணப் போவதில்லை. அதனால் மட்டும் ஒருவன் கொடியவன் என்று கருதப்பட ஏதுவில்லை. குரங்கு, மாடு, யானை போன்ற பெரிய விலங்கினங்களுக்குத் தீமை விளைவித்தால் அதைத் தட்டிக் கேட்க சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் எறும்பின் விஷயத்தில் அப்படி எந்த நடவடிக்கையும் எந்த நாட்டிலும் மேற்கொள்ளப்பட்டதில்லை. அப்படி இருந்தும் ஓர் எறும்புக்கு கூட தீமை வராமல் இருக்க வேண்டும் என்று வேண்டக் கூடிய அளவிற்கு ஒருவனிடத்தில் கருணை கனிந்திருக்க வேண்டும் என்பது இங்கு பொருள்.

நாம் மற்ற மனிதர்களிடம் அல்லது விலங்குகளிடம் கருணை காட்டும் போது அதன் பின்னால் ஏதாவது சுயநலமிருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் ஒரு எறும்பின் விஷயத்தில் எந்த லாப நோக்கமும் இருக்க வழியில்லை.

அத்தகையான சுயநலமற்ற உளம் கனிந்த கருணை தனக்குத் தரவேண்டும் என்பதுதான் குருதேவனின் பிரார்த்தனை.

இது மற்றவர்களால் போற்றப்படவேண்டும் என்கிற நோக்கத்துடன் வேண்டிய கருணையன்று.

பகவத் கீதையில் சொல்லியுள்ளார்கள்:-

"அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ரி, கருண, ஏவ, ச"......

என்று அனைத்து உயிரினங்களுடனும் வெறுப்பின்றி, நட்புடனும், கருணையுடனும் வாழ வேண்டும் என்று பொருள். உலகத்தில் அனைத்து சராசரங்களும் ஒரே பரம்பொருளின் வேறுபட்ட தோற்றங்கள். அதனால் நாம் மற்ற உயிர்களுக்குத் துன்பம் விளைவிப்பது நமக்கே தீமை செய்வதுபோல்.

சதா கடவுளைப் பற்றிய சிந்தனை தன்னுள் இருக்க வேண்டும் என்பது இச்செய்யுளில் குருதேவன் விடுத்துள்ள இரண்டாவது வேண்டுதல்.

மனம் எந்த பொருளைப் பற்றி சிந்தனை செய்கிறதோ அந்தப் பொருளின் தனித்தன்மையான குணங்கள் அந்த மனதிற்குக் கிட்டிவிடும் என்பதே மனோதத்துவம் கூறுகின்ற உண்மை. பதஞ்சலியின் யோக சூத்திரத்திலும் இதை விளக்கியிருக்கிறார். நல்ல விஷயங்களைப் பற்றி சிந்திக்கிறவன் நல்ல காரியங்களைச் செய்வான் என்பது அனுபவரீதியாக அறியப்பட்ட உண்மை.

அதனால் கருணைக் கடலாகிய கடவுளைப் பற்றி சதா நினைத்து வாழும் ஒருவனின் உள்ளத்தில் அந்த கருணையெனும் குணம் தானாகவே மலர்ந்துவிடும்.

எந்த உயிருக்கும் பீடை கொடுக்காமல் இருக்க வேண்டுமென்றால் கருணையுள்ளம் தேவை. அந்தக் கருணையுள்ளம் கிடைப்பதற்கு கருணாகரனாகிய கடவுளின் ஆசி தேவை: அந்த ஆசி கிடைப்பதற்கு கடவுளைப்பற்றிய விடாச் சிந்தனை தேவை. அப்படி கர்மமும், ஞானமும், பக்தியும் ஒருமித்த ஓர் வாழ்க்கை மனிதனுக்குத் தேவை என்பது இந்தச் செய்யுளின் போதனை.

ஞானமும், பக்தியும் நல்ல கர்மத்தை தூண்டக்கூடிய மனப்பக்குவங்கள். உலகில் அனைத்து உயிரினங்களும் இறைவனின் வேறுபட்ட தோற்றங்கள் என்பது ஞானம். அந்த கடவுளை உயிருக்கும் மேலாக நேசிப்பது பக்தி. ஞானமும் பக்தியும் வாழ்க்கையில் செயல்முறையை அடையும்போது அச்செயல் நேயமும் தியாகமும் ஒருமித்த கருணைச் செயலாக மாறிவிடுகிறது.

அப்படிக் கருணையைப் பல கோணங்களில் கண்டு, அதன் பொலிவை உணர்ந்துகொள்ள இந்த முதல் செய்யுள் நம்மை அன்புடன் அழைக்கிறது.

• • •

செய்யுள் -2

அருளால் வருமின்ப, மன்பகன்-
னொரு நெஞ்சால் வருமல்லலொக்கயும்
இருளன்பினெ மாற்றுமல்லலின்
கருவாகும் கருவா மிதேதினும்.

விளக்கம்:

அருளால் இன்பம் வந்துவிடும், அன்பு இல்லா நெஞ்சில் எல்லாவிதமான அல்லல்களும் வந்து குவியும்: இருள் அன்பை மாற்றிவிடும் அது அல்லலுக்கு கருவாகிவிடும் மற்ற வினைகளுக்கும் கூட வழிவகுத்து விடும்.

முதல் செய்யுளில் ஓர் எறும்புக்கும் கூட பீடை வராமல் இருக்கவேண்டும் என்று எண்ணக்கூடிய இரக்க உணர்ச்சியை தரவேண்டும் என்று இறைவனிடம் கேட்டார் குரு. அத்துடன் அயராத பக்தியையும் வேண்டினார்.

இரக்க உணர்ச்சியும் பக்தியும் ஒருமித்து கைகூடிய நெஞ்சில் கதிர்வீசிப் பொலிகின்ற தன்மை ஒன்றிருக்கிறது. அதுதான் அருள். பிறருக்கு எப்போதும் நன்மை ஏற்பட வேண்டும் என்னும் எண்ணமே அது. இது கருணையின் மற்றொரு முகம். அருள் இரக்கவுணர்ச்சி, அனுதாபம், தயை இவையாவும் கருணை உள்ளம் படைத்த ஒருவனிடம் அவ்வப்போது தேவைக்கேற்ப சித்தமாகின்ற மனவெழுச்சிகள்.

அருளால் இன்பம் வருகிறது என்று செய்யுளின் முதல் வரியில் கூறுகிறார் குரு. பிறர் நலத்தை நாடுபவனுக்கு எப்போதும் நலமே என்பது பொருள். மற்றவர்களிடம் பகை, பொறாமை போன்றவைகள்

இல்லாமலிருக்கும் போதுதான் மற்றவர்களின் நலனை வேண்டக்கூடிய பான்மை கைவருகிறது. மனதில் அருள் மிகுதி பெறும்போது அங்குள்ள பகையும் பொறாமையும் தானாகவே மறைந்து போகின்றன. அதுவே மாசற்ற மனப்பக்குவத்திற்கும் பேரின்பத்திற்கும் காரணமாகிவிடுகிறது.

சமூக வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் நாம் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டும் உறவு கொண்டும் வாழ வேண்டிய நிலையில் இருக்கின்றோம். தொடர்புகளும் உறவுகளும் அன்புடன் இணைந்து சமூகமாகும்போது வாழ்க்கை நலம் பெறுகிறது.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது மறை தந்த அருளுரை. *'ஸர்வே ஸந்து நிராமய...'* என்பது மற்றொரு வேதக் குரல். எல்லோரும் துன்பமின்றி இருக்கனும் என்பது அதன் உட்பொருள். இரண்டும் நல்லெண்ணம் படைத்த உள்ளங்களின் ஆசியுரைகள். பிறர்க்கு நன்மை வரவேண்டுமென்ற எண்ணத்துடன் வாழ்பவனுக்கு பேரின்பம் அனுபவமாகிறது.

திருக்குறள் கூறுகிறது:-

> *"........அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
> *புறத்த புகழும் இல......."*

அறநெறியால் வாழ்வதன் பயன்தான் இன்பமென்று; அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை....... அருள் படைத்த நெஞ்சங்கள் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் உருவானவை அறநெறிகள், அப்படியெல்லாம் வாழ்த்தப்பட்ட, அருள் இல்லையெனில் என்ன விளைவு! அதைத்தான் அடுத்தாற்போல் விளக்குகிறார் குரு.

அன்பில்லா நெஞ்சால் எல்லாவிதமான அல்லல்களும் வந்து சேரும். அருளில்லாதவனிடம் அன்பு இராது. அன்பில்லாவிடில் அறநெறிகள் சீர்குலைந்துவிடும்.

அறநெறிகள் சீரழிவதன் அறிகுறிகள் என்ன?

சுயநலமும், பகையும், பொறாமையும் செயல்பாடுகளுக்கு தூண்டுகோலாக மாறிவிடும்போது, அச்செயல்கள் அல்லலை விளைவிக்கும் வகையாக அமைந்துவிடும்.

அருளைத் தொடர்ந்துவரும் இன்பம், அன்பு ஆகியவற்றைப் பற்றிக் கூறிய பின் அதன் எதிர்புறமான இருளைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் கூறுகிறார் குரு.

இருள் என்பது அறிவின்மை, விவேகமின்மை என்றும் கூறலாம். அறிவின்மை அன்பை மாற்றிவிடும், அல்லலுக்கும் மற்ற எண்ணற்ற தீமைகளுக்கும் கருவாகிவிடும் என்கிறார்.

அன்பே தெய்வம் என்பார்கள். அந்த அன்பைக்கூட மறைத்துவிடக் கூடியது அறியாமையெனும் இருள். வாழ்க்கைப் பயணத்தில் வழிதெரியாமல், திசை தெரியாமல் நம்மைத் தவிக்க வைப்பது அறிவின்மை. எது நல்லது; எது கெட்டது என்று தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு நம்மை குருடாக்கி விடுகிறது அந்த இருள். அறிவின் வெளிச்சமில்லையெனில் வாழ்க்கை இருள் சூழ்ந்துவிடும்.

மீண்டும் வள்ளுவர் வாக்கு:

'அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்'....

அருள் சேர்ந்த உள்ளமுள்ளவர்கள் இருள் சூழ்ந்த துன்பவாழ்க்கையை அடைய மாட்டார்கள்.

அருள், இருள் என்று எதிரும் புதிருமாக நிற்கின்ற இரண்டு தன்மைகளை வைத்து திருவள்ளுவர் தொடுத்துவிட்ட, சிந்தனை ஸ்ரீ நாராயண குருவின் இச்செயுளில் விரிவுரை பெற்று விளங்குகிறது.

. . .

செய்யுள் -3

அருளன்பனுகன்ப மூன்னினும்
பொருளொன்னாணிது ஜீவதாரகம்:
'அருளுள்ளவனாணுஜீவி', யென் -
னுருவிட்டீடுக யீ நவாட்சரி.

விளக்கம்:

அருள், அன்பு, அனுதாபம் ஆகிய மூன்றுக்கும் பொருள் ஒன்றே அதுவே ஜீவதாரகை:

'அருளுள்ளவனே ஜீவி', என்ற ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட மந்திரத்தை ஜபித்தாக.

அருள், இருள் ஆகிய இரண்டு முரண்பட்ட தன்மைகளைப் பற்றி முன் செய்யுளில் அருளுரை தந்தார் குரு. அருளால் இன்பம் வருமென்றும், அன்பிலா நெஞ்சம் அல்லலுக்கு வழிவகுக்குமென்றும் கூறினார்.

இந்தச் செய்யுளில் அருள் செயல்பாடுகளாக உருவெடுக்கும்போது எப்படி மாறுபட்ட மனவெழுச்சிகளாக காணப்படுகிறது என்பதை விளக்குகிறார்.

அருள், அன்பு, அனுதாபம் ஆகிய மூன்றும் ஒரே பொருள் கொண்டவை என்கிறார்.

ஒருவன் இன்னொருவனிடம் நேயத்துடன் தொடர்புகொள்ளும்போது அவனுள் இருக்கும் அருள் அன்பு என்னவென்று தென்படுகிறது. அதே தொடர்பு இறக்கவுணர்ச்சியுடன் செயல்படும்போது அது அனுதாபமாக தோற்றமளிக்கிறது. ஆதலால்

அருள், அன்பு, அனுதாபம் ஆகியவை மூன்றும் ஒரே பொருள் கொண்டதாகின்றன.

அருள் எனும் அந்த அற்புதப் பொருளை "ஜீவதாரகை" என்று வர்ணிக்கிறார் குரு. இருட்டில் வெளிச்சம் தருகின்ற ஒளிச்சுடர் தாரகை. கடலில் செல்பவனுக்கு இரவு நேரங்களில் வழிகாட்டுவதும் ஆகாயத்தில் ஒளிர்கின்ற நட்சத்திரங்களே. வாழ்க்கையெனும் கடலில் திக்கற்று தவிப்பவனுக்கு நல்வழியைக் காட்டுகின்ற வெளிச்சம் அவனுள் ஒளிர்கின்ற அருளே.

"....அன்பகத் தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று......" -குறள்

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் வாழ்க்கை பாலைவனத்தில் நிற்கும் பட்டமரம் போல் என்று.

அன்பில்லா வாழ்க்கை பாலைவன மரம் போல பயனற்றுவிடும். வாழ்க்கையின் பசுமையும் நீரோட்டமும் அன்பேதான்.

'அருளுள்ளவனே ஜீவி'.... உயிரினத்தின் தன்மை உடம்புக்குள் இருக்கும் உயிரோட்டம். உயிரில்லையெனில் சடலம். இருப்பினும் ஒரு மனிதன் உயிர் வாழுகின்றான் என்பதற்கு அறிகுறி அவன் உலகத்தில் நடமாடுகிறான் என்பது மட்டுமல்ல. அவனுள் அருள் இருக்கிறதா, அவன் செயல்பாடுகளில் அன்பு இருக்கிறதா, அவனக்கு மற்றவர்களிடம் அனுதாபம் இருக்கிறதா ஆகியவற்றைப் பொறுத்துதான் அவன் உண்மையில் வாழ்கிறானா இல்லையா என்பதை நிர்ணயிக்கவேண்டும். காரணம் அருள் இல்லையெனில் ஒருவன் உயிரில்லாப் பொருளுக்கு ஒப்பாகும்: பாலைவனமரம் போல் பயனற்ற வாழ்க்கை அது.

ஜீவி எனும் சொல்லுக்கு ஒருவன் தகுதியுடையவனாக வேண்டுமென்றால் அவன் வாழ்ந்தால் மட்டும் போதாது. அவனுடைய வாழ்க்கை அறநெறிகளின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேணும். அறநெறிகளுக்கு ஆதாரம் அருள் என்று ஏற்கனவே கூறியுள்ளார்.

அருள் படைத்தவனே ஜீவி எனும் உண்மையை ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட ஒரு மந்திரமென மனதில் கொள்ளவேண்டும் என்கிறார்.

மேலும் எதற்கு ஜெபம்?

அருளுள்ளவனே ஜீவி என்ற உண்மையை உணர்ந்தால் மட்டும் போதாது: அதனை சதா ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும். மந்திரயோகம் என்று ஒரு வழிபாட்டுமுறை இருக்கிறது. மந்திர உபாசனை என்றும் சொல்லுவார்கள்.

சில மெய்பொருள் தத்துவங்கள் புத்தியால் மட்டும் புரிந்து கொண்டால் போதாது. அவை மனதில் பதிந்து ஜீவாதாரமென மாறி வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய வகையில் அமைந்திருக்கவேணும். இதைத்தான் சாட்சாத்காரம் என்கிறார்கள். அருள் உள்ளவன்தான் வாழ்கின்றவன் எனும் தத்துவம் அப்படி சாட்சாத்கரிக்கப் படவேண்டும் என்பதால்தான் அதனை ஒரு மந்திரமென ஜபிக்க வேண்டும் என்று கூறுகிறார் குரு.

உள்ளம் அருள் மிகுந்து தன்னிறைவை அடைகின்ற அந்த நிலைதான் வாழ்க்கையின் நிஜமான உய்வுநிலை. அன்னிலையில் வாழ்கிறவன்தான் வாழ்க்கையை அறிந்தவன்: காரணம் அந்த நிலையில் மட்டும்தான் அன்பே தெய்வம் என்று தெய்வத்தின் தன்மையை உள்ளத்தால் உணரமுடியும்.

‘காக்கைக்கு தன் குஞ்சு பொன்குஞ்சு’ என்பார்கள். நாம் நேசிப்பது நமக்குப் பிரியமானது. உலகத்தில் எல்லாவற்றையும் வேறுபாடின்றி நேசிப்பவனுக்கு அனைத்தும் பிரியமானதாகி விடுகின்றன. இதுதான் உண்மையான அன்பின் உய்வுநிலை.

இந்த நிலையில் எல்லாம் ஈசனின் இருப்பிடம். காரணம் எங்கும் எல்லாமும் அன்பின் உருவங்களாகத் தென்படுகின்றன. ஈசாவாஸ்ய உபநிஷத்தில் கூறியுள்ள உண்மையும் இதுவேதான்.

. . .

செய்யுள் -4

அருளில்லயதெங்கிலஸ்தி தோல்
ஸிர நாறுன்னொருடம்பு தானவன்;
மருவில் பிரவஹிக்கு மம்புவப்
புருஷன் நிஷ்ஃபல கந்த புஷ்பமாம்.

விளக்கம்:

ஒருவனிடம் அன்பு இல்லையெனில் அவன் எலும்பு, தோல், குடல் ஆகியவற்றுடன் நாறுகின்ற வெறும் உடம்பு மட்டும்தான். பாலைவனத்தில் தோன்றும் தண்ணீர் போலவும் மணமின்றிக் காய் விடாப் பூ போலவும் அவன் பயனற்றவனாவான்.

விரிவுரை:

மூன்றாவது செய்யுளில் அருளுள்ளவன்தான் ஜீவி என்று கூறி வாழ்வின் அடிப்படை, நீரோட்டம் அன்பே என்ற உண்மையையும் அன்பில்லாதவன் வாழத் தகாதவன் என்ற கருத்தையும் நமக்குத் தந்தருளினார் குரு. இந்தச் செய்யுளில் அக்கருத்தை மற்றொரு கோணத்தில் காணத் தூண்டுகிறார்.

அன்பு இல்லாதவன் எலும்பு, தோல், குடல் ஆகியவற்றை அடங்கிய வெறும் உடல்; அந்த உடல் நாற்றம் தரக்கூடியது. உயிரோட்டமிருந்தால் மட்டும் வாழ்வு பயன் பெறாது; அந்த உயிருக்கும் உயிராக விளங்கும் பரம்பொருளின் உண்மையான பான்மையை உணர வேண்டும். கடவுளின் தனித்தன்மையான குணாதிசயம்தான் அன்பு என்கிறது. அன்பு சுயரூபமாகிக் கொண்டவனே ஆண்டவன். அந்த ஆண்டவனை அறிய வேணுமெனில் அன்புகனிந்த உள்ளம் தேவை. அப்படியொரு உள்ளம் படைக்காத உயிர்வாழ்வு பயனற்றது. வாழ்க்கையின் சாரமே அன்பு. அது

இல்லாதவன் பாலைவனத்தில் தோன்றும் தண்ணீர்போல் வெறும் பார்வைக்கு மட்டும் தென்படுகின்ற மாயத்தோற்றம்; மணமில்லாமல் காய்விடாமல் மடிந்து விடும் பூவுக்குச் சமம்.

அகத்தில் அன்பு இல்லாதவன் வாழ்க்கை "பாலைவனத்தில் பட்டமரம் போல்" என்று வள்ளுவர் கூறியுள்ளார். மேலும் மேற்கூறிய குருதேவனின் கருத்திற்கேற்ப குறள் கூறும் மற்றொரு அருள்மொழி:

'புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" -குறள்

உடம்பின் அக உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புற உறுப்புகளால் என்ன பயன்?

அன்பில்லாத வாழ்க்கை சடல வாழ்க்கை என்று கூறுகிறது மற்றொரு குறள்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

உள்ளத்தில் அன்பின் கனிவு இல்லாதவன் தோலால் போர்த்தப்பட்ட வெறும் எலும்புக்குச் சமமாகும்.

பாலைவனத்தில் நீர் இராது. ஆனால் சில நேரங்களில் அங்கு நீர் இருப்பது போன்ற பிரமை ஏற்படும். இது ஒரு பொய்த் தோற்றம் அது போல் அன்பு இல்லாதவன் வெறும் மனித உருவமே அவனுடைய உடல் உறுப்புகள் நாற்றமடிப்பவை. அப்படியொரு உருவமிருந்து என்ன பயன்.

அதுபோல் மலர்ந்த பின்பும் வாசம் தரவில்லையெனில் காய்விட்டு இனவிருத்திக்கு ஏதுவாகவில்லையெனில் பூவா

"உய்யக் கருணை செய்வாயே - பெருமை கொண்டு
வையந் தழைக்க வைப்பானே....."

என்ற பாரதியார் பாடலில் குருவின் கருத்து எதிரொலிக்கிறது போல் தோன்றுகிறது.

பயனுடைய வாழ்க்கைதான் நிஜமான வாழ்க்கை. அன்பெனும் அரிய குணத்தைப் உணரும்போதுதான் வாழ்க்கை முழுமை அடைகிறது. வாழ்க்கை பாலைவனத் தண்ணீர்க்காட்சி போல், காய்விடாப் பூ போல்லில்லாமல் அன்புடன் வாழ்ந்து வளர்க;

. . .

செய்யுள் -5

வருமாறுவிதம் விகாரவும்
வருமாறில்லறிவின்னிதின்னு நேர்;
உருவாமுடல் விட்டு கீர்த்தியா -
முருவார்ன்னிஙனுகம்ப நின்னிடும்.

விளக்கம்:

உடலுக்கு ஆறுவிதமான மாற்றங்கள் வந்து சேரும். ஆனால் அறிவிற்கு அவ்விதம் நேர்வதில்லை. உருவான உடல் விட்ட பின்பும் கீர்த்தியென உருவெடுத்து அனுதாபம் நிலைகொள்ளும்.

விரிவுரை:

ஒருவனுக்கு அருள் இல்லையெனில் அவன் சடலத்திற்கு சமம்; நாறக்கூடிய வெறும் உடல் கொண்டவன் என்று முன் செய்யுளிலே நிரூபித்து காண்பித்தார் குரு. உடலுக்கு நிலையான உருவமில்லை. உடலுறுப்புகள் மாறிக் கொண்டிருக்கின்றன. மாற்றத்திற்கு உள்ளாகிய எந்த பொருளும் காலப்போக்கில் அழுகி நாறக் கூடியது. மாறாமல் நிலைத்திருக்கக் கூடியது மட்டும்தான் கீர்த்தி பெற்று விளங்குகின்றது.

பிறப்பு, நிலைத்தல், வளர்ச்சி, மாற்றம், தேய்தல், முடிவு இப்படி ஆறுவிதமான நிலைகள் கொண்டது உயிர்வாழ்வு. இந்த நிலைகளை யாராலும் தவிர்க்க இயலாது. ஆனால் இந்த நிலைகளால் பாதிக்கப்படாமல் ஒருவனில் ஒளிர்கின்ற ஒன்று இருக்கிறது; அதுதான் அறிவெனும் ஆற்றல். அது தேய்வதில்லை, அழிவு படுவதில்லை; பிறரால் பறிக்கப்படுவதுமில்லை.

"அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" -குறள்

அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவி என்று; பகைகொண்டு எதிர்ப்பவர்களுக்கு அழிக்க முடியாத அரண் என்று.

மாற்றத்திற்கு உள்ளாகக்கூடிய பொருள் மாயத்தோற்றம் கொண்டது. உண்மை என்பது மாற்றத்திற்கு அப்பாற்பட்டது. பூத உடல் மாறி மாறி முடிவில் இல்லாமல் போகக்கூடிய தன்மை கொண்டது. ஆனால் அதனுள் ஒளிர்கின்ற அறிவு அப்படியல்ல. அது தன்னையே அறியக்கூடிய பிரக்ஞை அல்லது ஞானம். உடலுக்கு சுயஉணர்வு இல்லை. பிரக்ஞையின் வாயிலாகத்தான் நாம் உடலுணர்வைப் பெறுகிறோம்.

இந்த பிரக்ஞை உருவமற்றது. அதுவே அறிவாகி ஞானமாகி நமக்கு வழிகாட்டுகின்ற அகப்பொருள். அனைத்து ஜீவராசிகளிலும் அந்த அகப்பொருள் விழிப்புணர்ச்சியுடன் நிலவுகின்றது.

அறிவாற்றலில் தோன்றி உயிர்வாழ்வுக்கு உய்வு தரும் அகத்தன்மை அனுதாபம் என்பது. முன்பு கூறப்பட்ட கருணையும், இரக்க உணர்ச்சியும் அனுதாபத்தின் பிறமுகங்கள்.

உடலுக்கு மாற்றங்கள் நேர்ந்துவிடும்; ஆனால் உள்ளத்தில் குடியிருக்கின்ற அகப்பொருளாகிய அறிவிற்கு மாற்றமில்லை என்று கூறிய குரு அந்த அறிவின் புறத்தோற்றம் எவ்வாறு அனுபவரீதியாக புலப்படுகிறது என்று கூறுகிறார்.

உருவமற்ற அறிவு அனுதாபமாக செயல்பட்டு அதன் விளைவாக வருகின்ற நன்மைகள் உலகத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைகின்றன. உடல் மடிந்த பின்பும் அந்த நன்மைகள் கீர்த்தி எனும் உருவமெடுத்து. அதாவது புகழ் கொண்டு நிலவுகின்றது. பூ விழுந்த பின்பும் அதன் வாசம் வெளிமண்டலத்தில் வீசிக்கொண்டிருக்குமல்லவா? அதுபோல் அருள் படைத்த

உள்ளங்கள் காலம் எய்தின பிறகும் அவர்கள் கீர்த்தியுள்ள அனுதாபச் செயல்பாடுகளும் தந்தருளிய அருளுரைகளும் அணையாமல் மனித இனத்திற்கு வழிகாட்டுகின்ற வகையில் எக்காலமும் நிலைகொள்ளும்.

அவ்வாறு கீர்த்தி எனும் உருவெடுத்த அனுதாபச் செயல்களை உலகத்தாருக்கு நல்கி மறைந்த சில புண்யாத்மாக்களை நினைவு கூறுகிறார் அடுத்து வருகின்ற செய்யுள்களில் குரு.

. . .

செய்யுள் 6

பரமார்த்தமுரச்சு தேர்விடும்
பொருளோ? பூத தயாகுடி மாபதியோ
சரணத்வய பாஷ்யகாரனாம்
குருவோ யீ யனுகம்பயாண்டவன்

விளக்கம்:

பரம உண்மையைப் பற்றிக்கூறி தேர் ஓட்டுகின்றவனா? ஜீவ ராசிகளுக்கு கருணைக் கடலாகியவனா? அத்வைத தத்துவத்திற்கு எளிதான விளக்கம் தந்தருளிய குருவா? யார் இந்த அனுதாப உள்ளம் படைத்தவன்?

விரிவுரை:

ஒருவனின் உடல் வீழ்ந்த பின்பும் அவன் ஆற்றியுள்ள அனுதாபச் செயல்கள் கீர்த்தியெனும் உருவெடுத்து நிலைகொள்ளும் என்று முன் செய்யுளில் கூறிய குரு தற்போது அவ்வாறு புகழ் பெற்று ஒளிவீசும் சில புண்யாத்மாக்களை நினைவு கூறுகிறார். மனித நேயத்தில் மனமுருகி மற்றவர்களுக்கென வாழ்ந்து மறைந்த அந்த மாமேதைகள் யார் யார்?

ஒருவன் பரம உண்மையை போதித்து தேர் ஓட்டிய பரம்பொருள். பகவத் கீதை எனும் வற்றாத ஞான ஊற்றை உலகிற்குப் தந்தருளிய பரமபிரான். பாரதப் போரில் பார்த்தனுக்குத் தேரோட்டியாக வந்து தர்மத்தை நிலைநாட்டிய வித்தகன்.

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்' -குறள்

என்கிற குறள் கூற்று கிருஷ்ண பிரானுக்கு மிகவும் பொருத்தமானது. தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவன் ஆற்றிய பணிகளும் இயற்றிய நெறியுணர்வும் உலகமாந்தருக்கு இன்றியமையாக் கொள்கைகளாக நிலவுகின்றன. பார்த்தனுக்குத் தேரோட்டியாகத் திகழ்ந்த அவன் எக்காலத்து மனிதனுக்கும் தமது வாழ்க்கைத்தேர் நல்வழியில், வெற்றிப் பாதையில், செல்வதற்குத் தேவையான பரமார்த்தங்களை அருளிச் செய்தவன். அவன் கீர்த்தி அணையா விளக்கு. அவன் அறிவுரைகள் தந்த சுடர்.

கிருஷ்ணபிரானுக்குப் பின் கருணைக்கடலாகிய மற்றொரு மாமேதையை நினைவுபடுத்துகிறார் குரு.......... யாரிவர்?

கருணாகரனாகிய இறைவனை உணர்ந்தவர்கள் யாவரும் கருணையுளம் படைத்த ஆத்மாக்களாவார்கள். எனினும் அவர்களில் முதன்மை பெற்றுத் திகழ்கின்றவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் ஸ்ரீ புத்தன்.

ஏறக்குறைய கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியவர், கபிலவஸ்து எனும் ஊரில் லும்பினி எனும் கிராமத்தில் பிறந்தவர். சாளுக்கிய வம்சத்தைச் சார்ந்த அரசகுமாரன் சுகபோகங்களின் சூழலில் வளர்ந்து வாழ்ந்தவர். ஒருமுறை வழியோரமாக ஒரு ஏழைக் கிழவனையும், நோயாளியையும் சடலத்தையும் பார்க்க நேர்ந்த இவர் வாழ்க்கையில் மற்றவர்கள் படும் துன்பங்களை நேரில் உணர்ந்து மனம் வருந்தி தனது இல்லற வாழ்க்கையைத் துறந்து உலகச் சேவைக்காக தன்னையே அர்ப்பணித்தவர். இரக்க உணர்வே உருவெடுத்து வந்தது போன்றவர். எண்ணற்ற கருணைச் செயல்கள் ஆற்றி யாகம், பலி போன்ற கொடூரங்களுக்கு முடிவு கண்டவர்.

அப்பேற்பட்ட, புத்தரைப் பற்றி கூறிய பின் குரு அத்வைத போதனைக்கு விளக்கம் தந்த மற்றொரு மாமேதையைப் பற்றிய சூசகம் தருகிறார்................ யாரிவர்?

பிரம்ம சூத்திரம், உபநிஷத்துக்கள், கீதை ஆகிய முப்பெரும் தத்துவக் குவியல்களுக்கு தெள்ளத் தெளிவான முறையில் விளக்கமளித்தவர் ஆதிசங்கராச்சாரியர். அவர்தான் இங்கு 'பாஷ்யகாரன்' என்று அழைக்கப்படுகின்ற அறிவு மேதை.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர். கேரளாவில் காலடி எனும் இடத்தில் அவதரித்தவர். ஒருமுறை பிரம்மச்சாரியாக பிக்ஷை வாங்கச் சென்றபோது ஒரு வீட்டில் ஏழைப்பெண்மணி ஒருவர் இவருக்கு ஒரு நெல்லிக்காய் பிக்ஷையாக கொடுத்தார்களாம். அந்த வீட்டில் வேறு எதுவும் இல்லை என்கிற நிலை. அவர்களின் வறுமையை உணர்ந்து மனம் உருகிய பிரம்மச்சாரி, அவர்களுக்காக 'கனகதாராஸ்தவம்' எனும் துதிபாடி மகாலஷ்மியை வேண்டினாராம். அதன்படி அங்கு தங்க நெல்லிக்காய்கள் மழையெனப் பொழிந்ததாம்.

அத்வைத தத்துவங்கள் நாடெங்கிலும் பரப்புவதற்கென பாரதத்தின் நான்கு இடங்களில் நான்கு மடங்களை நிறுவப்பெற்றார் இவர். அம்மடங்கள் இப்போதும் இந்து மதத் தர்மங்களை மக்களுக்கு போதிக்கும் பணியில் ஈடுபட்டு நிலவுகின்றன. இவர் இயற்றிய 'பாஷ்யங்கள்' தோத்திரங்கள் ஆகியவை ஞானவழியிலும் பக்தி வழியிலும் செல்லுகின்ற ஆத்மாக்களுக்கு வழிகாட்டி நிலைகொள்கின்றன. முப்பத்திரண்டாம் வயதில் சமாதியை எய்திய இம்மகானின் கருணைச் செயல்கள் கீர்த்தியெனும் உருவெடுத்து ஒளிர்கின்றன.

. . .

செய்யுள் 7

பூருஷாகிருதி பூண்ட தெய்வமோ?
நரதிவ்யாகிருதி பூண்டதர்மமோ?
பரமேச பவித்திர புத்ரனோ?
கருணாவான் நபி முத்துரத்னமோ?

விளக்கம்:

ஆண்மகன் ஒருவனின் உடல் வடிவம் பூண்ட தெய்வமா? மனித உருவத்தில் வந்துள்ள தர்மமா? பரமேசனின் புனித மகனா? கருணை படைத்த நபிநாயகம் எனும் முத்து ரத்தினமா.

விரிவுரை:

உயிர் நீத்த பின்பும் வாழ்நாளில் செய்த நன்மைகளின் கீர்த்தி நிலவுகின்றது என்று கூறி அவ்வாறு நிலைகொள்ளும் புண்யாத்மாக்களைப் பற்றிக் கூறினார் முன் செய்யுளில் குரு. கிருஷ்ணபிரான், புத்தர், ஆதிசங்கரன் ஆகியவர்கள் ஏற்கனவே நினைவு கூறப்பட்டனர். அவ்வரிசையில் வருகின்ற மற்ற சில தியாகச் செம்மல்களைப் பற்றி தற்போது ஞாபகப்படுத்துகிறார்.

முதலில் அவர்கள் எப்படித் தோற்றம் அளிப்பார்கள் என்று கூறுகிறார். தெய்வம் மனித உருவமெடுத்து வந்தார்ப்போல் இருப்பார்களாம் அல்லது நடமாடுகின்ற தர்மம் போல் தோற்றமளிப்பார்கள். அவர்கள் தெய்வீகத்தன்மையும் தர்மக்கொள்கையும் கொண்டவர்களாக இருப்பார்கள். அருள் படைத்த நெஞ்சங்கள் ஆற்றும் செயல்கள்யாவும் தர்மப் பாதையிலே செல்லக்கூடியவைகள். அவர்களால் அதர்மம் சிறிதளவுக்கு கூடத் தாங்கமுடியாது. அதனால் அவர்கள் தர்மம் மனித உருவத்தில் வந்தார்ப்போல் இருப்பார்கள்.

அப்பேர்ப்பட்ட இரண்டு மனித தெய்வங்களைப் பற்றிச் செய்யுளின் பிற்பகுதியில் கேள்வி கேட்கின்றது போல் வியப்படைகிறார் குரு.

பரமேசனின் புனித மகனா? ஆம். சுவர்க்கத்திலிருக்கும் கடவுளை தந்தை என்று அழைத்து பேசியவர் இயேசு. தெய்வ புத்திரன் என்று அழைக்கப்பட்ட இவர் ஆற்றியுள்ள கருணைச் செயல்கள் எண்ணற்றவை. இவரைவிட பெரிய தியாகச் செம்மலை பார்க்க இயலாது.

தொழுநோய் வாய்ப்பட்ட ஒரு ஏழையை இவர் தனது கைகளால் தழுவி குணப்படுத்தினார். குருடாகிய ஒருவருக்கு கண்ணொளி பகிர்ந்தளித்தார். சமூகத்தில் பின்தங்கிப் போனவர்களுக்கும் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் இவர் நல்வழி காட்டிப் பணியாற்றினார். முடிவில் இவரை சிலுவையில் அறைந்த போது அவ்வாறு செய்பவர்களை மன்னித்தருள வேணுமென்று கடவுளிடம் பணிந்து பிரார்த்தனை செய்தார். தனக்குத் தீமை செய்பவர்களைக்கூட மன்னிக்கக்கூடிய அளவுக்கு கருணையுள்ளம் படைத்த இயேசு மனித குல வரலாற்றில் மறையாமல் விளங்கும் ஓர் பொற்தாரகை.

முத்து நபி என்று அன்புடன் அழைக்கப்படும் நபிநாயகம் மற்றொரு தெய்வப்பிறவி.

கி.பி. 569ல் மெக்கா எனும் இடத்தில் பிறந்தவர். அந்த நாட்களில் அரேபிய நாட்டில் அதர்மமும் அராஜகமும் தலைவிரித்து ஆடியன. மெக்காவுக்கு அருகாமையில் ஓரிடத்து ஒரு குகையில் இவர் அவ்வப்போது சென்று ஏகாந்தத்தில் தவம் புரிவார். அவ்வாறு தியானத்தில் இருக்கும்போது ஒருமுறை இவருக்கு ஆண்டவனின் அருள் கிடைத்தது. 'நீ அல்லாவின் தூதுவன்' என்று கடவுளின் திவ்யவாக்கு இவர் காதில் ஒலித்தது. அதன்பின் இவர் அல்லாவின்

தாசன் என்று உணர்ந்து மக்களுக்கு சேவை புரியத் தொடங்கினார். ஒருவனே தெய்வம், அவனுக்கு உருவமில்லை என்று கூறிய இவருக்கு மற்றவர்கள் தொல்லை கொடுத்த வண்ணமிருந்தனர். அவர்களின் துன்புறுத்தல்களைத் தாங்கமுடியாமல் இவர் 'யாத்ரீப்' எனும் இடத்திற்கு குடிமாறினார். இது கி.பி. 622ம் ஆண்டு 20ம் தேதி நிகழ்ந்த இந்த சம்பவத்தை நினைவுகூறும் வகையில் 'ஹிஜ்றா' எனும் இஸ்லாமிய வருடம் அன்று முதல் ஆரம்பமானது. உலகத்தார் போற்றி வணங்கி வருகின்ற வகையில் தியாகச் சுடராக விளங்கிய பெருமானார் நபிநாயகத்தின் அறிவுரைகள் இஸ்லாமிய மக்களுக்கு மட்டுமல்லாமல் நல்லோர்களுக்கெல்லாம் ஒளிதருகின்ற விடிவிளக்குகளெனத் திகழ்கின்றன.

. . .



செய்யுள் - 8

ஜ்வரமாற்றி விபூதிகொண்டு முன்
னரிதாம் வேலைகள் செய்த மூர்த்தியோ?
அருதாசித வலஞ்க பாடி ஒன-
தரமாம் நோவுகெடுத்த ஸித்தனோ?

விளக்கம்:

விபூதியால் ஜுரத்தைக் குணப்படுத்தி அரிதான செயல்கள் பல செய்துகாட்டிய மூர்த்தியா? வயிற்றுவலியால் அவதிப்பட்டபோது கீர்த்தனை பாடி நோயை குணப்படுத்திய சித்தனா?

ஸ்ரீ நாராயணகுரு ஒரு பிக்குவாகத் திரிந்திருந்த காலங்களில் திருவனந்தபுரத்தில் இயங்கிக்கொண்டிருந்த ஒரு பழையத் தமிழ் புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று தமிழ் புத்தகங்களைப் படிப்பது வாடிக்கையாக இருந்தது. அங்கு தமிழ் இலக்கணமும் இலக்கியமும் நன்கு கற்றுத் தேறினார். அத்துடன் சித்தர்களாலும் சிவபக்தர்களாலும் இயற்றப்பட்ட, பல நல்ல நூல்களைப் படித்து ஆத்மஞானம் பெற அவருக்கு சந்தர்ப்பம் கிட்டியது. பெரியபுராணம், திருவாசகம், திருக்குறள், திருமந்திரம், தேவாரப்பாடல்கள் ஆகியவை குருவால் நன்கு கற்றறியப்பட்டவை. அவரே தமிழில் ஒரு தேவாரப்பாடலை இயற்றியுள்ளார்.

இந்த எட்டாவது செய்யுளில் தமிழகத்தில் தோன்றிய இரண்டு அருள் ஜோதிகளை நினைவு கூறுகிறார் குரு.

விபூதியால் ஜுரம் குணப்படுத்திய செயலைப்பற்றி முதல் வரியில் சொல்லுகிறார். இந்த அரிய செயலாற்றியவர் திருஞானசம்பந்தர் ஆவார்.

பிரம்மபுரி எனும் இடத்தில் ஒரு அந்தணருக்கு மகனாகப் பிறந்த சம்பந்தர் குழந்தைப் பருவத்திலே ஞானமும் கவிபாடும் ஆற்றலும் படைத்தவராக இருந்தார். அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தவர் குப்ஜபாண்டியன் எனும் மன்னர். ஒருமுறை கடுமையான ஜுரம் அவரை வாட்டியது. வைத்தியர்களும் சித்தர்களும் வந்து சிகிச்சை செய்தனர். அப்படியிருந்தும் நோய் குணப்படவில்லை. முடிவில் சம்பந்தருக்கு அழைப்பு வந்தது. சம்பந்தர் மன்னரின் உடலில் விபூதியைப் பூசி சிவபெருமானைத் தியானம் செய்தார். அப்போது மன்னரின் நோய் அறவே விட்டகன்றது.

மன்னருக்கு உடல் கூனாக இருந்தது. அதனால்தான் அவர் குப்ஜபாண்டியன் என்று அழைக்கப்பட்டு வந்தார். மன்னருடைய கூனையும் சம்பந்தர் குணப்படுத்தினார். அதன்பின் மன்னர் சுந்தர பாண்டியன் என்று அழைக்கப்பட்டு, பின்னர் பாண்டிய மன்னர் ஞானசம்பந்தரின் வழியைப் பின்பற்றி சிவபக்தியில் தனது வாழ்க்கையில் பூரிப்பைக் கண்டார்.

அடுத்தாற்போல் குரு மற்றொரு சித்தரைப் பற்றி சூசகமாகக் கூறுகிறார். இவர் ஈசனுக்குப் புகழ்பாடி தனது வயிற்று நோய் நிவர்த்தி கண்டவர். அப்பர் என்ற புகழ்பெற்ற சிவனடியாரின் கதை இது.

தென்னார்க்காட்டிலுள்ள திருவாமூர் எனும் இடத்தில் பிறவியெடுத்தவர் இவர். இவருடைய தாய் தந்தையர் வெள்ளாள குலத்தைச் சார்ந்தவர்கள். இவருடைய நிஜப்பெயர் மருள்நீக்கியார் என்றிருந்ததாம். திருஞான சம்பந்தர், ஒருமுறை இவரை சந்தித்தபோது 'அப்பர்' என்று அன்புடன் அழைத்தாராம். அதன்பின் இவர் அப்பர் என்று அழைக்கப்பட்டார்.

ஆரம்பக்காலத்தில் இவர் சமண மதத்தைப் பின்பற்றி வந்தார். இவருக்கு வயிற்றுநோய் வந்து அவதிப்பட்டபோது இவருடைய மூத்த சகோதரி 'நமசிவாய' எனும் மந்திரத்தை உபதேசித்து அம்மந்திரத்தை ஜபிக்கச் சொன்னார்களாம். அதன்படி மந்திரத்தை ஜபித்து சிவபெருமானை வேண்டிப் பாடினாராம். அப்போது இவருடைய நோய் நீங்கி குணமடைந்தார். அதன்பின் இவர் சிவனடியாராக மாறி பக்திப் பாடல்களை இயற்றினார். உலகத்தாருக்கு நன்மை பயக்கக்கூடிய தொண்டுகள் பல செய்த இவருக்குத் தர்மசேனன், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய மாற்றுப் பெயர்களும் இருந்தன.

தென்னகத்தில் சமணமதம் தலையோங்கி இந்து மதம் இழிவுபடத் தொடங்கிய அக்காலத்தில் சிவபக்தியை நாடெங்கிலும் பரப்பி தமது மதக் கொள்கைகளுக்கு புத்துணர்வு பெறச்செய்த பெருமை திருஞான சம்பந்தர், அப்பர் போன்றவர்களைச் சாரும்.

. . .



செய்யுள் - 9

ஹரனென்னெழுதி பிரஸித்தமாம்
மறயொன்னோதிய மாமுனீந்த்ரனோ?
மரியாதுடலோடு போயொரப்-
பரமேசன்றெ பரார்த்யபக்தனோ?

விளக்கம்:

ஹரன் என்று எழுதி, புகழ் பெற்ற மறையொன்றைத் தந்தருளிய மாமுனியா? மரியாமல் உடலுடன் சென்றுவிட்டு பரமேசனின் பாதத்தைத் தேடிச் சென்ற பக்தனா?

முன் செய்யுளில் திருஞான சம்பந்தர், அப்பர் ஆகிய இரண்டு சித்தர்களைப் பற்றிக் கூறிய குரு இப்போது அவ்வரிசையில் மேலும் மற்ற இரண்டு அருளுள்ளங்களைப் பற்றி நினைவுபடுத்துகிறார். பெரியபுராணம் எனும் புகழ்பெற்றத் தமிழ் நூலில் இவர்களின் அற்புதச் சாதனைகளைப் பற்றித் தெளிவுபடக் கூறியுள்ளார்கள்.

ஹரனை அதாவது சிவபெருமானை வழிபட்டு வந்த ஒரு மாமுனியைப் பற்றிச் செய்யுளின் முதற்பகுதியில் அறிவுரை தருகிறார். இவர் ஒரு தனி மறையைத் தந்தவராவார். மாணிக்கவாசகர்தான் இங்கு சூசகமாகக் கூறப்படுகின்ற மாமுனி. இவர் சிவபக்தர். இவர் இயற்றிய திருவாசகம் வேதத்திற்கு ஒப்பானது. அதனால் இவரை 'மறையொன்றோதிய மாமுனி' என்று குறிப்பிட்டுக் கூறுகிறார் குரு.

மதுரைக்கு அருகில் வடவூரில் அவதரித்தவர் இவர். அதனால் 'வடவூரான்' என்றும் இவர் அழைக்கப்பட்டார். வேத சாஸ்திரங்களில் அபாரப் புலமை பெற்ற இவர் பாண்டிய மன்னனுக்கு மந்திரியாகப் பணியாற்றினார். ஒருமுறை மன்னருக்காகக் குதிரைகளை வாங்குவதற்கு இவர் 'பெருந்தற' எனும் இடத்திற்குச் சென்றாராம். அங்கு ஒரு கோவிலில் சென்று இவர் சிவபெருமானை வழிபட்டார்.

அப்போது ஒரு பெரியவர் வந்து இவருக்கு ஞானம் உபதேசித்தார். உண்மையை உணர்ந்து வைராக்கியம் அடைந்த இவர் தனது பதவியையும் மற்ற பந்தங்களையும் அறவே விட்டு துறவியானார். அப்படி யிருக்கும்போது ஒரு நாள் இவருக்குச் சிவபெருமானின் தரிசனம் கிட்டியது. 'உன் வாசகங்கள் யாவும் மாணிக்கம் போன்றவை: அதனால் உனக்கு மாணிக்க வாசகர் எனும் பட்டத்தைச் சூட்டுகிறேன்' என்று கடவுள் இவருக்கு அருளினார். அன்று முதல் வடவூரானை "மாணிக்கவாசகர்" என்று அழைக்கப்பட்டார்.

அடுத்தாற்போல் உடலுடன் இறைவனடி சேர்ந்த மற்றொரு சித்தரைப் பற்றி கூறுகிறார் குரு. இவரும் சிவபக்தியைப் பரப்பும் பணியில் தன்னை அர்ப்பணித்தவர். உடலுடன் கைலாயம் எய்திய இவர்தான் புகழ்பெற்ற சித்தர் சுந்தரமூர்த்தி நாயனார்.

எல்லையற்ற சிவபக்தியில் முழுகியிருந்த ஒரு பிராம்மணக் குடும்பத்தில் பிறந்தவர் இவர் பக்தியெனும் மனப்பான்மை இவருக்கு பாரம்பரியமாகக் கிடைத்துள்ள பொக்கிஷம். சிவபெருமானைத் துதிக்கின்ற எண்ணற்றப் பாடல்களைத் தமிழுக்குத் தந்தவர் இவர். திருஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரனாரும் பாடியுள்ள பாடல்கள் பிற்காலத்தில் தேவாரம் என்று புகழ்பெற்று விளங்கின. தேவாரம் என்றால் தேவனுக்கு அர்ப்பணிக்கின்ற ஆரம் என்று பொருள். கடவுளை துதி பாடி வணங்குவதே ஞானத்தின் உச்சி என்று எண்ணியவர்கள் இவர்கள். வாழ்வின் தூய்மையையும் அறநெறிகளையும் இலக்காகிக் கொண்டுள்ள இவர்களின் பாடல்கள் இக்காலத்திலும் நமது கோவில்களில் பக்தியுடன் பாடி வருகின்றனர். காலத்தால் அழிக்கப்படாமல் இவர்களின் அருளுரைகள் பாடல்களாக உருவெடுத்து கீர்த்தி பெற்று நிலவுகின்றன.

. . .

செய்யுள் - 10

நரரூபமெடுத்து பூமியில்
பெருமாறீடின காமதேனுவோ!
பரமாத்புத தான தேவதா
தருவோயீ யனுகம்ப யாண்டவன்?

விளக்கம்:

பூவுலகில் மனித உருவமெடுத்து நடமாடுகின்ற காமதேனுவா? அற்புதமான தானங்களைத் தருகின்ற தேவலோகத்து விருட்சமா இந்த கருணையுளம் படைத்தவன்?

முதலில் கருணைக் கடலாகிய கடவுளிடம் கருணை படைத்த நெஞ்சம் வேணுமென்று வேண்டிய குரு கருணையெனும் தெய்வீக மனப்பான்மையின் அருமையை உயர்த்திக் காட்டினார். கருணையினால் வாழ்வுக்கு வருகின்ற நன்மைகளையும் அது இல்லையெனில் நேரக்கூடிய தீய விளைவுகளைப் பற்றியும் கூறினார். அதன் பிறகு கருணையுளம் படைத்த சில சான்றோர்கள் செய்து காட்டிய அனுதாபச் செயல்களைப் பற்றி சூசகமாகக் கூறி அவர்கள் சென்று காட்டிய அறவழியே மனிதனுக்கு உய்யும் வகையில் அமையுமென்றும் அறிவுரையளித்தார்.

இந்த செய்யுளில் இரக்க உணர்ச்சியுடன் வாழ்கின்றவர்கள் எவ்வாறு பரோபகாரச் செயல்களால் தியாகத்தின் உச்சகோடியை அடைந்தவர்களாவார்கள் என்று கவிநயம் கொண்ட அலங்கார நடையில் கூறுகிறார்.

மற்றவர்களின் நன்மைக்காக செல்வங்களை அவர்களின் விருப்பத்திற்கேற்ப வழங்கியருளும் தேவலோகப் பசு காமதேனு என்கிற கோமாதா. தேவர்கள் கூட போற்றி வணங்கும் இந்தப் பசுவின்

அருள்பெற்று தேவைகளை நிறைவேற்றிய நல்லோர்களின் கதைகள் புராணங்களில் இருக்கின்றன.

அதுபோல் வேண்டியனவற்றையெல்லாம் வாரி வழங்கும் வள்ளல்தன்மை படைத்தது சொர்க்கத்தில் இருப்பதாகக் கருதப்படும் கற்பகம் எனும் தேவதை மரம்.

காமதேனுவைப் போல் கற்பகத்தைப்போல் கேட்பதெல்லாம் கொடுத்துதருளிய நல்லவர்களின் கதையை ஞாபகப்படுத்துகிறார் குரு. சிபி சக்ரவர்த்தி அப்பேற்பட்ட ஒரு கதாபாத்திரம். ஒருமுறை கழுகால் துரத்தப்பட்ட புறா ஒன்று சிபி சக்ரவர்த்தியின் மடியில் அடைக்கலமானது. பின் தொடர்ந்து வந்த கழுகு புறா தனக்கு இரை என்று கூறி அந்தப் புறாவை விட்டுக் கொடுக்கும்படி கேட்டது. புறாவைக் காப்பாற்ற வேணும், ஆனால் அதற்காக கழுகுக்கு இரை முடங்கக் கூடாது என்று எண்ணிய சிபி தன் உடலிலிருந்துத் தேவையான அளவிற்குச் சதையை வெட்டியெடுத்து அந்தக் கழுகுக்கு கொடுத்தாராம். ஓர் உயிரைக் காப்பாற்றும்போது மற்றொரு உயிருக்குத் துன்பம் வரக்கூடாது என்பது இந்த கருணைச் செயலின் கருத்து.

'ஆதானம் ஹி விஸர்க்காய' என்பது காளிதாச மஹா கவியின் வாக்கு. கிடைப்பதெல்லாம் கொடுப்பதற்கே என்பது அதன் பொருள். அப்படி வாழ்ந்த ஒரு மாமேதை நந்திதேவன் என்பவர். இவருடைய கதை பாகவத புராணத்தில் தரப்பட்டுள்ளது.

இவர் ஒருமுறை தன்னிடமிருந்த அனைத்துச் செல்வங்களையும் ஏழைகளுக்குத் தானமாக வழங்கினார். இவர் குடும்பம் பட்டினியால் அப்படி பல நாட்கள் சென்று விட்டன. ஒரு நாள் கொஞ்சம் கஞ்சி சாப்பிட்டு பசியடக்க முயன்றார். அப்போது ஒரு ஏழைப் பிராமணன் அங்கு வந்து பிச்சைக் கேட்கலானான்

நந்திதேவன் அந்த கஞ்சியில் பாதி அவருக்குக் கொடுத்தார். எஞ்சிய கஞ்சியை குடிக்கத் தொடங்கிய போது ஒரு சூத்திரன் அங்கு வந்து யாசித்தார். நந்திதேவன் கையிலிருந்த கஞ்சியில் பாதியை அவருக்கு வழங்கலானார். அதன் பின் ஒரு மலைவாசி ஒரு சண்டாளன் இப்படி ஒருவருக்குப்பின் ஒருவர் அவரிடம் சென்று பிச்சை கேட்டார்கள். நந்தி தேவன் தன் கையிலிருந்து கஞ்சியை அவர்களுக்கு பரிமாறி சுயம் பட்டினியை ஏற்றுக் கொண்டாராம். இவர் ஒரு பெரிய விஷ்ணு பக்தராகத் திகழ்ந்தவர்.

சதா இரக்க உணர்ச்சியுடன் வாழ்கின்றவர்கள் காமதேனுவைப்போல் கற்பகம் போல் மற்றவர்களுக்கு எப்போதும் உதவி புரிகின்ற தியாகச் செம்மல்களாவார்கள். அவ்விதமான வாழ்க்கையைத்தான் உயர்ந்த வாழ்க்கை என்ற கருத்தை பரிமாறித் தனது “அனுகம்பா தசகம்” எனும் கவிதைத் தொடருக்கு முடிவு காண்கிறார் குரு.

இந்த கவிதைத் தொடரில் மேலும் ஒரு செய்யுளின் வாயிலாகச் சொல்லப்பட்ட உண்மைகளை உணர்ந்தவர்களுக்கு எவ்வாறு பலன் கிடைக்கக்கூடும் என்று கூறுகிறார் குரு.

. . .



ஃபலசுருதி

அருமாமறை யோது மர்த்தவும்
குருவோதும் முனியோது மர்த்தவும்
ஒரு ஜாதி யிலுள்ளதொன்னுதான்
பொருளோர்த்தாலகிலாகமத்தினும்.

விளக்கம்:

அருமை மறை ஓதுகின்ற பொருளும் குருவும் முனியும் ஓதுகின்ற பொருளும் ஒரே வகையைச் சார்ந்தவை நினைத்துப் பார்த்தால் அனைத்து வேதங்களுக்கும் பொருளாகியுள்ளது ஒன்றேதான்.

கருணையைப் பற்றியும் கருணையுளம் படைத்த புண்யாத்மாக்களைப் பற்றியும் பத்து செய்யுள்களில் கூறியுள்ளார் குரு. சான்றோர்கள் பாடல்களை இயற்றியபின் அப்பாடல்களைப் பாடி வழிபடுபவர்களுக்குக் கிட்டக்கூடும் பலன்களைப் பற்றியும் கூறுவார்கள். இதற்கு 'ஃபலசுருதி' என்பார்கள். ஸ்ரீ நாராயணகுருவும் இந்தச் செய்யுளில் அவ்வாறு ஃபலசுருதியை தந்தருளியிருக்கிறார்.

எண்ணற்ற அறிவுச் செல்வங்களை கவிதைகளாக வடித்துத் தந்தவர் குரு. மலையாளம், தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அபாரப் புலமை பெற்றிருந்த அவர் வேத வேதாந்த சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்து தேறியவர். அத்துடன் அருந்தவம் புரிந்து நேரிடையாக ஆத்ம ஞானத்தையும் பெற்றவர். அவர் இயற்றியுள்ள ஞானப் பாடல்களில் 'அனுகம்பா தசகம்' (கருணைப்பதிகம்) மிகவும் எளிய நடையில் சாமான்யர்களுக்கும் புரிகின்ற வண்ணம் இயற்றப்பட்டுள்ளது இந்தப் பதிகம். இந்த கவிதைத் தொடரைப் படித்து பொருள் புரிந்துகொள்வதற்கு புலமையோ ஞானமோ

தேவையில்லை. வாழ்க்கை தூய்மையடைந்து வளம் பெற வேணும் என்று எண்ணமுள்ள யாவருக்கும் இக்கவிதை பயன்படக்கூடியது.

அன்பு உள்ளம்கொண்ட "வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்பொருள் கண்டவர்களின் சொற்கள் இன்சொற்களாகும்" என்பது வள்ளுவர் வாக்கு இதற்கேற்ப இப்பதிகம் மெய்ப்பொருள் கண்ட, ஒரு மாமுனிவரால் சொல்லப்பட்ட வாய்ச்சொற்கள்.

நீத்தார் பெருமையைப் பற்றி பேசுகின்ற வள்ளுவம்

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு....." என்று கூறியுள்ளது. ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும் என்பது இக்குறளின் பொருள். அவ்வண்ணமேதான் இந்தக் கருணைப் பதிகம் ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் புண்யச் செயல்களை குரு நினைவு கூறியுள்ளார்.

மெய்யறிவு பெற்ற குருவும் முனியும் ஓதுகின்ற பொருள் ஒன்றே அதுவே மறைப்பொருள். அதுபோல் எல்லா வேதங்களின் உட்பொருளும் ஒன்றேதான். இந்த உண்மையைத்தான் இந்தச் செய்யுளில் குரு கூறியுள்ளார். வேதங்கள் மாறுபட்டவை. குருமார்களும் முனிவர்களும் வேறு வேறு என்றிருக்கலாம். அவர்கள் தோன்றிய தேசங்களும் காலங்களும் வேறுபட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் கூறியுள்ள மெய்பொருள் ஒன்றேயாகும். இந்த உண்மையைப் புரிந்துகொண்டு கருணைப்பதிகம் படித்து செயல்படுபவர்களுக்குப் பயன் தரும் என்பதுதான் இந்த ஃபல சுருதியின் உறுதி மொழி.

கிருஷ்ணபிரான், புத்தர், இயேசு, நபி நாயகம், அப்பர் போன்ற **உலகில்** தோன்றிய எல்லா தீர்க்கதரிசிகள் - இறை செய்தியாளர்கள்,

குருமார்கள் பிறந்து வளர்ந்தது பல வகைப் பண்பாட்டுப் பின்னணிகளிலும், காலங்களிலுமாகும் அவ்வளவுதான். அவர்கள் உபயோகித்தவை பல மொழிகள், சிந்தனை முறைகள் பல, ஆனால் எல்லோருடைய லட்சியமும் ஒன்றே. அவர்கள் சென்ற வழியும், காட்டிய பாதையும் அன்பும் அனுதாபமும் ஒளி தந்து விளங்குகின்றவை. நாமும் அவ்வாறு அறநெறிகளின் வழியை பின்பற்றிக் கருணைஉளம் படைத்தவர்களாக வாழ்வில் உய்ய வேண்டும் என்பது ஸ்ரீ நாராயண குருவின் போதனை.

மனிதன் எப்படி வாழவேண்டும் என்று ஸ்ரீநாராயணகுரு நமக்கு மிகத்தெளிவாக வழங்கிய போதனைகள்தான் இந்த செய்யுள்கள்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மதம் எதுவானாலும்
மனிதன் நல்லவனாக வாழவேண்டும்

- ஸ்ரீ நாராயணகுரு

எல்லா மதத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஸ்ரீ நாராயண குருதேவர் இயற்றிய தெய்வீகப் பாடல்

தெய்வ தசகம்

மூலம்

1

தெய்வமே காத்து கொள்கங்ஙு
கைவிடா திங்ஙு ஞங்ஙளே
நாவிகன் நீ பவாப்திக் கோர்-
ஆவி வன் தோணி நின் பதம்.

2

ஒந்நொந்நா யெண்ணியெண்ணித் தொட்-
டெண்ணும் பொருள் ஒடுங்ஙியால்
நிந்நிடும் த்ருக்கு போலுள்ளம்
நிந்நிலஸ் பந்த மாகணம்.

3

அந்ந வஸ்த்ராதி முட்டாதெ
தந்நு ரக்ஷிச்சு ஞங்ஙளெ
தன்யராக்குந்ந நீ யொந்நு-
தந்நெ ஞங்ஙள்க்கு தம்புரான்.

4

ஆழியும் திரையும் காற்று-
மாழவும் போலெ ஞங்ஙளும்
மாயயும் நின் மஹிமையும்
நீயு மெந்நுள்ளி லாகணம்.

5

நீயல்லோ ஸ்ருஷ்டியும் ஸ்ருஷ்டா-
வாயதும் ஸ்ருஷ்டி ஜாலவும்
நீயல்லோ தெய்வமே ஸ்ருஷ்டிக்
குள்ள ஸாமக்ரி யாயதும்.

6

நீயல்லோ மாயயும் மாயா-
வியும் மாயா வினோதனும்
நீயல்லோ மாயயெ நீக்கி
ஸாயுஜ்யம் நல்கு மார்யனும்.

7

நீ ஸத்யம் ஞான மானந்தம்
நீ தந்நெ வர்த்தமானவும்
பூதவும் பாவியும் வேறல்
லோதும் மொழியுமோர்க்கில் நீ.

8

அகவும் புறவும் தீங்ஙும்
மஹிமா வார்ந்ந நின் பதம்
புகழ்த்துந்நூ ஞங்ஙளங்ஙு
பகவானே ஜயிக்குக.

9

ஜயிக்குக மஹா தேவா
தீனாவன பராயண
ஜயிக்குக சிதானந்தா
தயாஸிந்தோ ஜயிக்குக.

10

ஆழமேறும் நின் மஹஸ்ஸா
மாழியில் ஞங்ஙளாகவே
ஆழணம் வாழணம் நித்யம்
வாழணம் வாழணம் ஸுகம்.

தெய்வ தசகம்

தமிழாக்கம்

1

(கடவுளே பேணிக் காப்பாய்
கைவிடா தெம்மை இங்கே
படகோட்டி நீ, உன் பாதம்
பவக்கடல் கடக்கும் தோணி!)

2

(எண்ணிடும் பொருள் ஒவ்வொன்றும்
இறுதியில் ஒடுங்கும் வேளை
மண்ணிலே நிலைக்கும் என்றன்
மனமொன்றே வேண்டும் உன்னுள்)

3

(அன்னமோ டாடை நல்கி
அன்புடன் பேணி எம்மை
உன்னத மாக்கும் நீயே
உயிர் தரும் வேந்தன் அன்றோ!)

4

(ஆழியும் அலையும் காற்றும்
ஆழமும் போல எம்மைச்
சூழ்ந்திடும் மாயை நீக்கிச்
சுடரொளி பொலியச் செய்வாய்!)

5

(படைப்பவன் நீயே மற்றும்
படைத்திடும் பொருளும் நீயே!
படைத்திடும் தொழிலும் நீயே
படைத்திடும் நெறியும் நீயே!)

6

(மாயை நீ, மாயா வியும் நீ
மாயாவி நோதன் நீயே
மாயையை நீக்கி மாறா
மலர்ப்பதம் தருவோய் நீயே!)

7

(உண்மையும் நீயே, ஞான
ஒளியும் நீ, உவகை நீயே!
மண்ணக நிகழ்ச்சி, ஓதும்
மறைமொழி, அனைத்தும் நீயே)

8

(அகம்புறம் ஒளிரும் நின்றன்
அருட்சுடர் மகிமை யாலே
புகழ்ந்துனைப் பாடு கின்றோம்
பூரணா, போற்றி போற்றி!)

9

(தீனரைக் காப்போய் வெல்க!
தேவனே, வெல்க, வெல்க!
ஆனந்த வடிவே வெல்க!
அருட்பெருங்கடலே வெல்க!)

10

(ஆழ்ந்தநின் கருணை எண்ணும்
ஆழியில் நாங்கள் மூழ்கி
ஆழ்ந்திட வேண்டும்! என்றும்
வாழ்ந்திட வேண்டும் நன்றே!)



ஸ்ரீ நாராயண குருதேவரின் அமுத மொழிகள்

1. "ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம்" மானுடர்க்கு

2. மது, விஷம் அதை அருந்தாதே! அளிக்காதே!

3. ஜாதியை கேட்காதே! சொல்லாதே!
நினைக்காதே!

4. விவசாயம் செய்து முன்னேற வேண்டும்

5. ஒற்றுமையே பலம், அதுவே முன்னேற்றப் பாதை

6. நீயே சத்யம், ஞானம், ஆனந்தம்

7. படித்து முன்னேற வேண்டும்

8. பெரிய கோவில்கள் பள்ளிக்கூடங்களாக விளங்கவேண்டும்

9. சமஸ்கிருதம் படிக்க வேண்டும், நமது பண்டைய நூல்கள் அந்த மொழியில்தான் இருக்கிறது. தற்காலத்திற்கு ஆங்கிலம் இன்றியமையாதது. அதை கற்கவில்லையென்றால் வெளி உலகத்தினுடன் தொடர்பு கொள்ள முடியாது.

குருதேவரைப் பற்றி மகான்கள்

"நான் உலகத்தின் பல பாகங்களிலும் பிரயாணம் மேற்கொண்டிருக்கிறேன். பல சித்தர்களையும், மகரிஷிகளையும் சந்தித்திருக்கிறேன். ஆனால் ஸ்ரீ நாராயண குரு சுவாமிகளைவிடவும் மேலாகவோ, அன்றி அவருக்கு சமமாகவோ மதிக்கக்கூடிய ஒரு மகா புருஷனைக் காண முடியவில்லை. தெய்வ அருள் கூடிய யோக நிலை காட்டும் கண்களையும் பிரகாசம் மிகுந்த முகப் பொலிவையும் ஒரு போதும் என்னால் மறக்க முடியாது" எனக் கூறுகிறார் மகாகவி இரவீந்திரநாத்தாகூர். 1922 நவம்பர், 15.

திருவனந்தபுரம் ஜில்லா வர்க்கலை சிவகிரி மடத்தில் ஸ்ரீ நாராயண குருவை மகாத்மா காந்தியடிகள் 1925-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் சந்தித்து உரையாடினார். அவரிடம் உபதேசமும் பெற்றார் பிறகு காந்தியடிகள் கீழ்கண்டவாறு கூறினார்.

அழகு மிளிரும் திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தை வந்து பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்ததையும் புண்ணிய மூர்த்தியான ஸ்ரீ நாராயண குரு சுவாமிகளைத் தரிசிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையும் என்னுடைய வாழ்நாளில் பாக்கியமாக கருதுகிறேன்.

"மகாத்மா காந்தி"

நான் இறைவனை மனித உருவில் கண்டேன். அந்த அருள் முகம் இந்தியாவின் தென் கோடியில் இருந்து அருள் பாலிக்கின்ற ஸ்ரீ நாராயண குருவினுடையதல்லாமல் வேறு எவருடையதாக இருக்கமுடியும்.

"தீனபந்து **C.F. Andrews**"

தமிழநாட்டின் பகுத்தறிவுத் தந்தை எனப் போற்றப்படும் ஈ.வெ.ரா அவர்கள் குருதேவரின் பால் மிகுந்த பற்று வைத்திருந்தார். குருதேவர் நடத்திய வைக்கம் சத்தியாக்கிரகத்தில் பெரியாரும் போராடி வைக்கம் வீரர் எனப் பெயர் பெற்றார்.

"அருளுதியே"

ஊனின்றி உறவின்றி ஒற்றுமையின் ஒளியின்றி
ஊமையாய் வாழ்ந்தவரின் ஒளி விளக்கே!

பேரின்றி போனவரின் பேரிடரில் வாழ்ந்தவரின்
பிழைதிருத்தி பொருள் புகுத்தி புதுவாழ்வு!

பாரினிலே தந்தவரே! பலர் வியக்க தழைத்தவரே!
பரம் பொருளின் திருவடிவே! பெருமைமிகு
நாராயண குருவே ! நல்லறத்தின் திருஉருவே!
நாடோறும் பாடுபொருளானவரே! வாழியவே!

ஒன்றே குலமும் ஒருவனே தேவன் என்ற
திருமூலர் வழி நின்று தெருவெல்லாம் முழிக்கமி

நன்றே செய்தவரே ! நால்வகைப் பிரிவினையை
நயமாக விலக்கி நலிந்தவர்க்கு ஞான விளக்காகி

பொன்றா புகழ் பெற்றவரே! பெரியீரே!
புத்தனுக்கு அடுத்தது பகைதடுத்து உயர்ந்தவரே!

பொன்னடியாம் உம்மடியை யாம் போற்றி
புவிதனிலே உம்புகழ் பாடி வாழ்த்திட அருளுதிரே !!!

ஜ.ஆர். பெருமாள் இ.ஆ.ப.